**2019 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை**

**நிறுவனத்தின் பெயர்: நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை**

**செலவு தலைப்பு இலக்கம் - 09**

## 1.1 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 17 ஆவது அரசியலமைப்பு திருத்தம்மூலமாக திருத்தம் செய்யப்பட்ட உறுப்புரையின் பந்தி 59(1) இன்கீழ், 2002 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை தாபிக்கப்பட்டுள்ளது.

## 1.2 நிறுவனத்தின் நோக்குகை, செயற்பணி, நோக்கங்கள்

### 1.2.1. நோக்குகை

நிருவாகத்தின் நியாயத்தன்மையினை நிறைவேற்றுவதற்காக நற்புறவுடன்கூடிய மற்றும் தேர்ச்சி பெற்ற நிறுவனமாக செயற்படல்.

### 1.2.2. செயற்பணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் i xஆவது அத்தியாயத்தில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி அரச அலுவலர் அல்லது பொலிஸ் அலுவலர் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் எடுக்கப்படும் தீர்மானம் அல்லது கட்டளைகள் தொடர்பாக தரம் மற்றும் சுயாதீனம் என்பவற்றுடன் மீளாய்வினை மேற்கொண்டு நிருவாகத்துடனான நியாயத்தினை நிறைவேற்றுதல்.

## 1.3 பிரதான கடமைகள்

1.3.1 அரச அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுவால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டளைகளுக்கும் எதிராக தொடரப்படும் மேன்முறையீடுகளை ஆய்வு செய்து தீர்ப்புகளை வழங்குதல்.

1.3.2. மேன்முறையீடுகளை பொறுப்பேற்றல்
2002ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை சட்டத்தில் 4(1) மற்றும் 4(2) இன்படி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

1.3.3 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள்-குறித்த சட்டத்தில் 5(1) மற்றும் 5(2) நடைமுறை திட்டம்படி அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு 6(அ), (ஆ), (இ), (ஈ) படி செயற்படல்.

1.3.4 உரிய சட்டத்தில் 7 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் 02 மாத காலப் பகுதிக்குள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.3.5 உரிய சட்டத்தில் பிரிவு 8(1) இன் ஏற்பாடுகளின்படி வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன், பிரிவு 8(2) இன் படி குறித்த தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமாகும். அது தொடர்பாக நீதிமன்றத்தின் வழக்கின்போதோ வழக்கு நடவடிக்கையின்போதோ கேள்விகளை எழுப்புதலாகாது.

## 1.4 <u>அமைப்புப் படம்</u>

தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இரண்டு பேர்களைக் கொண்டமைந்த மூன்று நபர்களிலான தீர்ப்புச் சபை

செயலாளர்

உதவிச் செயலாளர்

எழுதுநர்மொழி I /II பெயர்ப்பாளர்

உரை பெயர்ப்பாளர்

க.தரவு இயக்குநர்

சுருக்கெழுத்தாளர்

சாரதி

அலுவலக பணியாளர்

புத்தகம் கட்டுநர்

சட்டத்தில் பிரிவு 2 இன் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நீதிச் சேவை ஆணைக்குழுவால் தலைவர் அவர்கள் உள்ளிட்ட மூன்று பேர்களைக் கொண்டமைந்த நியாயச் சபை நியமிக்கப்படும்.

2019.12.31 ஆந் திகதியில் கட்டமைப்பு:

தலைவர் நீதிபதி திரு. என்.ஈ.திசாநாயகக்க

உறுப்பினர் சட்டத்தரணி திரு.ஏ.ஞானதாசன்

உறுப்பினர் இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற திரு.ஜீ.பி.அபேகீர்த்தி

செயலாளர் திரு.கே.பி.டி.எம்.பீ.பி.திசாநாயக்க

உதவிச் செயலாளர் திரு.எம்.ரபீக் இஸ்மாயில்

## 02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

I. மேன்முறையீடு தொடர்பிலான முன்னேற்றம் - 2019.12.31 ஆந் திகதியில்

| | | | |
|---|---|---|---|
| 2019.01.01ஆந் திகதியில் முன்கொண்டு வரப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | | 879 |
| மீள முன்னெடுக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | 33 | |
| 2019 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | 055 | 538 |
| காலப் பகுதிக்குள் விசாரணை மேற்கொள்ள வேண்டிய மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | | 1,417 |
| காலப்பகுதிக்குள் முன்வைப்பதற்கு வாய்ப்பு அளித்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 163 | | |
| காலப்பகுதிக்குள் விண்ணப்பித்து விலக்கிகொள்ளப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 39 | | |
| நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | 342 | |
| மேன்முறையீட்டாளரின் / அரசாங்க சேவை ஆணைக்குழு/ தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வேண்டுகோள்படி வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 20 | | |
| அதன்படி இக் காலப் பகுதிக்குள் முடிவுறுத்திய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | | 564 |
| 2019.12.31 ஆந் திகதியில் முடிவுறுத்தப்படாத 2020 ஆண்டுக்கு கொண்டுச் சென்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | | 853 |

II. எதிர்கால நோக்கு

1. அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுஊடாக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக தற்போது ஆரம்பித்து பேணிச் செல்கின்ற பணிகளை குறைவின்றியும் காலதாமதமின்றியும் இற்றைப்படுத்தல் மற்றும் மேலும் சமர்ப்பிக்கின்ற மேன்முறையீடுகள் தொடர்பில் உரிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பிரகாரம், கணக்காய்வு அலுவலர்களின் மேன்முறையீடுகளையும் ஆய்வு செய்யும் பணிகள் இந் நியாய சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2002 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க நியாய சபை தாபிக்கும் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் இந்த மேன்முறையீடுகளை ஆய்வு செய்யும் அதிகாரம் நியாய சபைக்கு இல்லாதபடியால், சட்டத்தை திருத்தம் செய்வதற்காக தற்போது அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அலுவலர்களின் மேன்முறையீடுகள் தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## அத்தியாயம் - 03 - 2019 ஆம் ஆண்டு செம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான முழுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1. நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

**2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று** **ஏசீஏ-எப்**

**வரவு செலவு 2019** உண்மையான ரூபா

| வரவு செலவு 2019 | | குறிப்பு | 2019 | 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | **1** | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி | **2** | - | - | **ஏசீஏ-1** |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | **3** | - | - | |
| - | வரியல்லாத வருமானம் மற்றும் பிற | **4** | 197,800 | - | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் (அ)** | | 197,800 | - | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | **-** | - | |
| - | திறைசேரி முற்பணம் | | 28,113,000 | 27,691,618 | **ஏசீஏ-3** |
| - | வைப்புகள் | | - | - | **ஏசீஏ-4** |
| - | முற்பணக் கணக்குகள் | | - | - | |
| - | வேறு பெறுகைகள் | | | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **28,113,000** | **27,691,618** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ) + (ஆ)** | | **28,310,800** | **27,691,618** | |
| | **கழி: செலவினம்** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | **-** | - | |
| 15,395,000 | வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள் | **5** | 15,302,216 | 13,491,915.00 | |
| | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | | | **ஏசீஏ-2(ii)** |
| | உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள் | **7** | - | - | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12,850,000 | ஏனைய மீண்டெழும் செலவினம் | **9** | 12,643,939 | 12,777,019.00 | |
| **28,245,000** | **மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)** | | **27,946,155** | **26,268,934** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 250,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | **10** | - | - | |
| 800,000 | மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் | **11** | 624,966 | 486,875.00 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | **ஏசீஏ-2(ii)** |
| - | நிதி சொத்துகளை கையகப்படுத்தல் | **13** | - | - | |
| 25,000 | திறன் மேம்பாடு | **14** | 15,000 | - | |
| - | பிற மூலுதன செலவுகள் | **15** | - | - | |
| **1,075,000** | **மொத்த மூலதன செலவினம் (உ)** | | **639,966** | **486,875** | |
| | **பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)** | | 570,084 | **692,795** | |
| | **வைப்புக் கொடுப்பனவு** | | 45,584 | 5,405.00 | **ஏசீஏ -4** |
| | **முற்பணக் கொடுப்பனவு** | | 524,500 | 687,390.00 | |
| | **மொத்த செலவினம் எ = (ஈ + உ + ஊ)** | | 28,258,593 | 27,448,604 | |
| 29,320,000 | **2019 டிசம்பர் 31 இல் முற்பண மீதி ஏ = (இ -எ)** | | **52,207** | **243,014** | |

குறுக்கு குறிப்புகளை கழித்த பின்னர் (ரூபா.897.612)

3.2 நிதி நிலைமைப் பற்றிய கூற்று

3.2 நிதி நிலைமைப் பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | உண்மையான 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித் தொகுதி, உபகரணம் | ஏசீஏ-6 | 19,763,924 | 19,138,958 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5-5(அ) | 1,417,680 | 1,504,580 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 52,207 | 243,014 |
| மொத்த சொத்துக்கள் | | **21,233,811** | **20,886,552** |
| **நிகர சொத்து / பங்கு** | | | |
| நிகர சொத்து | | 1,417,680 | 1,504,580 |
| சொத்து, பொறித் தொகுதி, உபகரண ஒதுக்கு | | 19,763,924 | 19,138,958 |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | ஏசீஏ - 5 (ஆ) | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ-4 | - | - |
| முற்பண மீதி | ஏசீஏ-3 | 52,207 | 243,014 |
| மொத்த பொறுப்புகள் | | **21,233,811** | **20,886,552** |

பக்க இலக்கம் 5 முதல் 53 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 54 முதல் 61 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரங்களும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | M. R... (signature) |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | தலைமை நிதி அலுவலர் ∴பிரதான கணக்காளர் ∴ பணிப்பாளர்(நிதி) ∴ ஆணையாளர் (நிதி) |
| பெயர்: | பெயர்: කේ. ඩී. ඩී. එම්. පී. බී. දිසානායක | එම්. රෆීක් ඉස්මායිල් |
| பதவி: | பதவி: ලේකම් | பெர்: සහකාර ලේකම් |
| திகதி : 2020. | திகதி 2020 | திகதி 2020 |
| අභියාචන විනිශ්චය අධිකාරිය | පරිපාලන අභියාචන විනිශ්චය අධිකාරය | පරිපාලන අභියාචන විනිශ්චය අධිකාරය |

6

**2019 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப் பகுதிக்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| **உண்மையான** | **நடப்பு ஆண்டு**<br>2019<br>ரூபா | **கடந்த ஆண்டு**<br>2018<br>ரூபா |
|---|---|---|
| **<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | _ |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமல்லாத பெறுகைகள் | - | - |
| பிற திணைக்களங்கள், அமைச்சுக்கள் மூலம் சேர்க்கப்பட்ட வருமானம் | - | - |
| முற்பணம் கிடைக்கப்பெறல் | 28,310,800 | 27,691,618 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல்** | **28,310,800** | **27,691,618** |
| **<u>கழி - காசு செலவிடல்</u>** | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 27,618,627 | 26,961,729 |
| மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் | - | - |
| பிற செலவின தலைப்புகளுக்கான செலவினம் | - | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | - |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஆ)** | **27,618,627** | **26,961,729** |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ)** | **692,173** | **729,889** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஈ)</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| சொத்து விற்பனை, பௌதீக ஆதன விற்பனை | - | - |
| கடன் அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)** | - | - |

| | | |
|---|---|---|
| <u>கழி - காசு செலவிடல்</u> | | |
| பௌதீக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல் | 639.966 | 488.875 |
| முற்பணம் செலுத்தல் | - | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **639,966** | **488,875** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)** | **(639,966)** | **(488,875)** |
| **தொழிற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)ஸ்ரீ(இ-ஊ)** | **52,207** | **243,014** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்நாட்டு கடன் பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன் பெறுகை | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| வைப்புகள் கிடைக்கப்பெறுதல் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளூர் கடன்பெறுகை மீள் கொடுப்பனவு | - | - |
| வெளிநாடடு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு | - | - |
| வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | - | - |
| **நிதிச் செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ) -(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி** | **52,207** | **243,014** |

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா.000

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| 20.3.9900 | ஏனைய வருமானம் | மதிப்பிட இயலாது | - | 191,800. | - |

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 27,900,000 | 28,245,000 | 27,946,155 | 99% |
| மூலதன | 1,075,000 | 1,075,000 | 639,987 | 60% |

**3.7நி.பி 208 குறிப்பு பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்தின் செலவினத்திற்கான ஒதுக்கீடு - இல்லை**

3.8 நிதியல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா.000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2019.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை | 2019.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திரங்கள் | - | 20,416,436 | - | - |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | - | - | - |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | - |

**3.9 கணக்காய்வாளர் அதிபதியால் வழங்கப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை**

**ஜேபீஏ/ஈ/ஏஏரீ/2019/33**

பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர்,
நிருவாக மேன்முறையீட்டு நியாய சாப,

**நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி கூற்றுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்ச அறிக்கை**

மேற்படி அறிக்கை மற்றும் நிதிக் கூற்றின் மும்மொழியிலுமான ஆரம்ப பிரதி இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எம்.ஜீ.பி.ஜீ.பீ.பிரனாந்து
உதவி கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதிக்காக

பிரதி:- பணிப்பாளர் நாயகம் - அரச கணக்கு திணைக்களம்

பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர்,

நிருவாக மேன்முறையீட்டு நியய சபை

**நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி பொழிப்பு அறிக்கை.**

-----------------------------------------------------------------------------------------------------------------------1

**நிதிக் கூற்றுகள்**

------------------------

1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

-------------------------------------

நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய,இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்யையில் குறிப்பிடப்படுகிறது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்த, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியல் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை எடுத்துரைக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாக உள்ளது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 16(1) பிரிவு பிரகாரம் நியாய சபையால் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்றவாறான நிதிக் கூற்றுகளை தயாரிக்க முடியுமானவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38(1)(இ)உப பிரிவு பிரகாரம் நியாய சபையின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு தேவையான பயனுள்ள உள்ளக நிருவாக முறைமையினை தயாரித்து பேணப்படுகின்றது என்பதற்கு பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலா் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையினை பயனுள்ளவாறு பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 1.4. நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளா் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயா் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின்போது அது தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று

விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
- ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுகளை சமர்ப்பிக்கும்போது, நிதிக் கூற்றுகளில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்குதல்.

எனது கணக்காய்வின்போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(ஈ) பிரிவு பிரகாரம் நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 .நிதிச் செயலாற்றுகை கூற்று

#### 1.6.1.1வருமானம் கிடைக்கப்பெறல்

நிதிச் செயலாற்றுகை கூற்றில் வைப்புக் கொடுப்பனவாக ரூபா.45,584 ஐ குறிப்பிடப்பட்டிருப்பினும், ஏசீஏ - 4 படிவத்தில் வைப்புகள் தொடர்பாக எதுவித குறிப்பும் காட்டப்படவில்லை.

#### 1.6.1.2 வருமானமல்லாத கிடைக்கப்பெறுவன.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முற்பணம் கிடைக்கப்பெறல்**

நிதிச் செயலாற்றுகை கூற்றில் வருமானம் அல்லாத கிடைக்கப்பெறுவனவற்றின் கீழ் ரூபா.611,400 ஆன முற்பணக் கிடைக்கப்பெறுதல் குறிப்பிடப்படவில்லை.

**(ஆ) ஏனைய கிடைக்கப்பெறுதல்கள்**

(i). ஏனைய கிடைக்கப்பெறுதலின்கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா.438,428 ஐ காட்டப்படவில்லை.

(ii). வருமானம் அல்லாத கிடைக்கப்பெறுவனவைகளாக, ஏனைய கிடைக்கப்பெறுவனவைகளின்கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா.197,800 ஐ வருமானம் கிடைக்கப்பெறுதலாக வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனையவற்றின்கீழ் காட்டப்பட்டிருந்தது.

**1.6.1.3 மூலதனச் செலவினம்**

2002 ஆம் ஆண்டு இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் செலவு விடயத்தில் ரூபா. 250,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

**1.6.2 நிதி நிலைமை பற்றிய கூற்று**

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீதி ரூபா.625,512 ஐ குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கத்தையும் அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

**1.6.3.1 தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்**

நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சலின்கீழ் வருமானமல்லாத கிடைக்கப்பெறுவனவைகள் காட்டப்பட்டிருந்தது.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 சட்டங்கள்,விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2002 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை சட்டத்தில் 9 (1) பந்தி | நியாய சபையின் தவிசாளர், நிதிச் சேவை ஆணைக்குழுவிடம் உசாவி தேவையான அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமனம் செய்தல் வேண்டுமாயினும், 05 அலுவலர்களை நீதிச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் சேவையில் ஈடுபடுத்தியிருந்ததுடன், அந்தக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஒப்பந்த அடிப்படையின்மீது ஆட்சேர்ப்புச் செய்கையில் ஆணைக்குழுவிடம் உசாவுதல் மேற்கொண்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | (i) 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 | அலுவலர்கள் அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதல் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தியிருக்கவில்லை. |
| | (ii) 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி 2 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆவது பந்தி | 03 பதவிகளில் மூன்று அலுவலர்கள் 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதியும், 04 பதவிகளில் 03 அலுவலர்கள் 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதியும் என்ற வகையில் ஆறு ஓய்வு பெற்ற அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டல் கோவையில் 1.2.1 (அ) பந்தி | சேவை உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன்னர் கொள்முதல் முறைகளை பின்பற்றி உரிய நேரத்தில் சேவைகளை வழங்குவதற்கு நிறுவனங்களை தெரிவு செய்யப்படவில்லை. |

## 03. தொழில்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் தொழில்பாட்டு மீளாய்வு, நிலைபேண்தகு அபிவிருத்தி, நல்லாட்சி, மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்கு ஏற்புடையதான கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.1 பந்தியில் காட்டப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

எம்.ஜீ.பி.ஜீ.பி.பிரனாந்து
உதவி கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதிக்காக,

## அத்தியாயம் 04 செயலாற்றுகைச் சுட்டிகள்

**4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்** - ஏற்புடையதாகாது.

## அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக – ஏற்புடையதாகாது.

## அத்தியாயம்- 06

மனிதவள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம்.

| | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம்/(அதிகப்படி யான) |
|---|---|---|---|
| சிரேட்ட | 02 | 02 | - |
| மூன்றாம் நிலை | - | - | - |
| இடை நிலை | 22 | 11 | 11 |
| ஆரம்ப | 08 | 06 | 02 |
| **மொத்தம்** | **32** | **19** | **13** |

6.2 தற்போதுள்ள பணியாற்றொகுதியினரின் வெற்றிடங்களும் உள்ளடங்கும் வகையில் நடைமுறை ரீதியாக பொருத்தமான வகையில் கடமைகளை கையளிக்கப்பட்டுள்ளதால் நியாய சபையின் கடமைகளின் மீது தாக்கங்கள் ஏற்படாமை.

மனிதவள அபிவிருத்தி

| **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை** | **நிகழ்ச்சித் திட்டத்தின் காலவெல்லை** | **முழுமொத்த முதலீடு ரூபா‘000** | | **நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)** | **வெளியீடு / பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு** |
|---|---|---|---|---|---|---|
| | | | **உள்நாட்டு** | **வெளிநாட்டு** | | |
| அடிப்படை தமிழ் மொழி பயிற்சி | 02 | 06 மாதங்கள் | 15 | - | உள்நாட்டு | தமிழ் மொழி தேர்ச்சி பரீட்சையில் சித்தி பெறுதல் |
| சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் | 04 | 01 நாள் | - | - | உள்நாட்டு | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தை நிறுவனத்தினுள் செயற்படுத்தல் |

அத்தியாயம் - 07

## இணக்கப்பாட்டு அறிக்கை

**இணக்கப்பாட்டு அறிக்கை**

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அது தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | | | |
| **2** | புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணுதல். (நி.ஓ.விதி 445) | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சர் வேதனாதிகள், பதிவு, தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும்பராமரித்தல் | இணக்கமற்றது | உள்ளக கணக்காய்வு பதவி அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் இல்லை. | அதற்காக எழுதுநர் ஒருவரை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து உரிய திகதியில் மற்றும் பொது திறைசேரியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.10 | பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமற்றது | பொறுப்புகள் இருக்கவில்லை | பொறுப்புகள் ஏற்பட்டால் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GAN20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 3 | நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல்(நி.பி.135) | இணக்கமானது | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள்மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11ஆந் திகதிய 171/2004ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை படி அரச ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை | இணக்கமற்றது | கணக்காளர் ஒருவர் நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காமை | உதவி செயலாளரின் மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. |
| 4 | வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல் | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமற்றது | பாரிய அளவில் கொள்முதல்கள் செய்வதில்லை | அவ்வாறான திட்டம் நடைமுறையில் பயனற்றதாக இருத்தல் |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமற்றது | உள்ளக கணக்காய்வாளர் இல்லாத படியால் அவ்வாறான திட்டங்களை தயாரிக்காமை | எதிர்வரும் ஆண்டில் திட்டம் தயாரிப்பதற்கு கருதுகின்றேன். |
| 4.4 | வருடாந்த மதிப்பீடு தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.திணைக்களத்தில் (NDB) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வளார் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **6** | **உள்ளக கணக்காய்வு** | ஏற்புடையதாகாது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | ஏற்புடையதாகாது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01-2017இன்படி சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரால்அலுவலகத்தில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்டசுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கு ஒருங்கிணைப்பு அலுவலரை நியமனம் செய்து அந்த அலுவலர் தொடர்பான தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறியபடுத்துதல். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம்05/2016இன்படி பொருட்களை ஒப்பாய்வு செய்து தொடர்புடைய அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்புமூலம் அதிகப்படியான, குறைப்பாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி.77 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றல் இடம் பெற்றுள்ளது. | இணக்கமற்றது | கழிக்கப்பட வேண்டிய பொருட்கள் இல்லாமை | தேவைப்பட்டால் அவ்வாறு மேற்கொள்வதற்கு கருதுதல் |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு | இணக்கமற்றது | கழிப்பனவு செய்யப்பட | தேவைப்பட்டால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | | வேண்டிய வாகனங்கள் இல்லாமை | அவ்வாறு செய்வதற்கு கருதுதல் |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன், புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நிதி.ஒழு.விதி 104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29ஆந் திகதிய2016/30ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3.1 பந்தயின் விதிகள்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலீத்தல் | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வானங்களின் உரித்து பதிவு புத்தகம், குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கி கணக்குகளைத் தீர்த்தல் | இணக்கமற்றது | செயற்படாத வங்கி கணக்குகள் இல்லாமை | செயற்படாத வங்கி கணக்குகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல் | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி.94 (1) இன்படி ஒதுக்கீடு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருத்தல். | இணக்கமானது | | |
| **12** | **அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான | இணக்கமற்றது | காலம் பிந்திய கடன் மீதி | நிலுவை கடன் மீதி ஏற்பட்டால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | | இல்லாமை | அவ்வாறு பணியாற்றுதல் |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | இணக்கமானது | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புகளை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமற்றது | பொது வைப்புக் கணக்கு இல்லாமை | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமற்றது | பொது வைப்புக் கணக்கு இல்லாமை | |
| **14** | **கட்டுநிதி கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமற்றது | நிமித்தக் கட்டுநிதி வழங்கப்படமாட்டாது | அவ்வாறான தேவை ஏற்படின் அவ்வாறு பணியாற்றுதல் |
| 14.3 | நி.பி. 371 இன்படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பபை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமற்றது | நிமித்தக் கட்டுநிதி வழங்கப்படமாட்டாது | அவ்வாறான தேவை ஏற்படின் அவ்வாறு பணியாற்றுதல் |
| 14.4 | கட்டுநிதி கணக்கின் மீதியனை திறைசேரி புத்தகங்களுடன்மாதாந்தம் ஒப்பிடுதல். | இணக்கமானது | | |
| **15** | **வருமாணக் கணக்கு** | ஏற்புடையதாகாது | வருமானக் கணக்கு இல்லை | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | பதவியணியில் எல்லா உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமற்றது | | |
| 16.3 | 20.09.2017அந் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல். | இணக்கமானது | | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல் வழங்கதல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின்மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல் | இணக்கமற்றது | இணையத் தளம் செயற்படாமை | நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின்படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமற்றது | பயிற்றுவிப்புகள் வழங்கப்படவில்லை | |
| **18** | பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல் | | | |
| 18.1 | 05/2008இலக்க மற்றும்05/2018(1) ஆம் இலக்க பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம், பிரசைகள் / சேவைப் பெறுநர் பட்டயம் தயாரித்து நடைமுறைப்படுத்தியிருத்தல். | இணக்கமற்றது | நீதிமன்றத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் மேற்கொள்கின்ற நிறுவனமாவதால் இவ்வாறானதொரு செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு சிரமமாதல் | நடைமுறையில் பரீட்சித்து பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| 18.2 | அந்த சுற்றறிக்கையின் 2.3 பந்தி படி, பிரசைகள்/சேவைப் பெறுநர்கள் பட்டயம் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், மதிப்பிடல் என்பவற்றுக்கு நிறுவனத்தால் முறைமையொன்றை தயாரித்திருத்தல். | இணக்கமற்றது | நீதிமன்றத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் மேற்கொள்கின்ற நிறுவனமாவதால் இவ்வாறானதொரு செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு சிரமமாதல் | நடைமுறையில் பரீட்சித்து பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| **19** | மனிதவளத் திட்டத்தினை தயாரித்தல் | | | |
| 19.1 | 2018.01.24ஆந் திகதிய பொது நிருவா சுற்றறிக்கை இலக்கம் 02/2018இல் இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக்கொண்டு மனித வள திட்டம் தயாரித்திருத்தல். | இணக்கமற்றது | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நீதிமன்றத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நடைமுறையில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடத்திற்கு ஆகக்குறைந்தது 12 மணிநேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்புகளை மேற்படி மனிதவள திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல் | இணக்கமற்றது | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நீதிமன்றத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நடைமுறையில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையில் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமற்றது | முழுமொத்த பதவியணி 19 பேராவதால் நீதிமன்றத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | முழுமொத்த பதவியணி 19 பேராவதால் நடைமுறையில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன் . |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல் | இணக்கமற்றதாகும் | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நீதிமன்றத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | முழுமொத்த பதவியணி 19 பேர் ஆவதால் நடைமுறையில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன் . |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புகள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |